CC.No. 151/2019

Name: சங்கிலிகருப்பசாமி

PW.1

Date: 10/01/2024

சாட்சி அழைப்பானணயின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

(எதிரி ஆஜர் இல்லை, எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>குறுக்குவிசாரணை</u>**

1)நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவது சம்பந்தமாக அரசுதுறையில் ஏதேனும் பதிவு பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று வேறு ஏதேனும் ஆவணம் எதிரியிடம் பெற்றேனா என்றால் காசோலையை மட்டும் தான் கொடுத்தார். அன்றேய தேதியில் வட்டி எதுவும் பேசவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் உ்ணமையில் பணம் கொடுத்திருந்தால் எதிரியிடம் வேறு ஏதேனும் ஆவணம் பெற்றுயிருப்பேன் என்றும், வட்டியை பற்றி பேசியிருப்பேன் என்றும், அவ்வாறு பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் மேற்படி இரண்டையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2019 மற்றும் 2020 ம் ஆண்டிற்கான வருமானவரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.குறிப்பிட்ட தொகைக்கு மேல் ஒருவருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றால் ஏதேனும் ஆவணம் அல்லது காசோலை மூலம் தான் கொடுக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2)ஆனால் பணமாக தான் கொடுத்ததாக புகாரில் கூறியுள்ளேன் என்றால்

சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தின் டினாமினேசன் தெரியுமா என்றால் ரூ.200 மற்றும் ரூ.100 ரூபாய் நோட்டுகள் கொடுத்தேன். எனக்கு எந்த விதமான வருமானமும் இல்லை என்றும், எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

3)வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட நபர் யார் என்று எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி வாங்கவில்லை என்றும், அதனால் இந்த வழக்கானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அறிவிப்பை எதிரி தான் பெற்றுக்கொண்டாரா என்று எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் சாட்சி யாரும் இல்லை என்றால் சரிதான்.

4) உண்மையில் இவ்வளவு பெரிய தொகை கொடுத்திருந்தால் சாட்சிகள் முன்னிலையில் தான் கொடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லை என்பதால் நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கை பார்வையிட்டால் நான் எதிரிக்கு இவ்வளவு பெரிய தொகை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பது தெரியவரும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் முக்கியமான ஆவணத்தை பார்வையிட வேண்டும் என கூறிய தன் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)